# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 02.11.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இப்போதும் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சஹாபாக்களின் பைஅத் தொடர்பான அறிவிப்புகளை எடுத்துரைப்பேன்.

முதல் அறிவிப்பு ஹஸ்ரத் முஹம்மது சா சாஹிப் உடையதாகும். நான் கூறிய முந்தைய அறிவிப்புகளில் இதற்கு முன்பான ஒரு சம்பவத்தை எழுதியிருக்கின்றார்கள். நான் எங்கிருந்து இந்த மேற்கோளை எடுத்துள்ளேனோ அது தொடர்ந்து செல்கின்றது.

கூறுகின்றார்கள்: அஹ்மதி ஆவதற்கு முன்பாக லூதியானா இரயில் நிலையத்தில் ஹுஸூர் (அலை) அவர்களை சந்திக்கும் போது எழுதினேன். ஸைய்யதிற்கு மற்றவர்களிடம் பைஅத் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என முதலில் எழுதியுள்ளார். இவர் ஸைய்யத் ஆவார். இவர் கூறுகின்றார். ஸைய்யதிற்கு மற்றவர்களிடம் பைஅத் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என எண்ணியிருந்தேன். முன்பும் ஓர் அறிவிப்பு கூறப்பட்டுள்ளது. எனவே நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உண்மையாளர் என புரிந்திருந்தும் பைஅத் செய்ய அவசியம் இல்லை என்று நினைத்தேன். இந்த கருத்தில் நான் சில காலம் உறுதியுடன் இருந்தேன். ஆனால் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபைப் பற்றி எப்பொழுதும் எந்தவொரு கூட்டத்திலும் பேசப்பட்டாலும், அது புகழ்ச்சியுடன் பேசப்பட்டால் ஆர்வமாக கேட்பேன். எந்தக் கூட்டத்தில் எதிர்ப்புடன் பேசப்படுமோ அந்த கூட்டத்தில் உட்கார்வதை விரும்பமாட்டேன். அப்படிப்பட்ட கூட்டங்களில் உட்காரமாட்டேன். எழுந்து சென்று விடுவேன்.

இறுதியில் ஒருநாள், ஒருவர் மற்றவரிடம் "பீர் இல்லாதவனே முர்ஷித் இல்லாதவனே" என்று கூறிக் கொண்டிருந்ததைக் கேட்டு எனக்கு பீர் இல்லாதவனே முர்ஷித் இல்லாதவனே என்று கூறுவது ஒரு கெட்ட வார்த்தையாகும் என்று தோன்றியது. மேலும் நானும் பீர் இல்லாமல் முர்ஷித் இல்லாமல் இருக்கின்றேன். ஸைய்யத் மட்டும் விதிவிலக்கா என்ன? எனக்கு தானாகவே சில சான்றோர்களைப் பற்றிய சிந்தனை தோன்றியது. ஸைய்யதாக இருந்த சில பெரியவர்களும் ஸைய்யத் அல்லாத சில பெரியவர்களிடம் பைஅத் செய்து பலன் பெற்றுள்ளார்கள். நானும் என்னைப் பற்றி கவலைப்பட ஆரம்பித்தேன். ஆனால், எனது அறிவீனத்தின் காரணமாக எவரிடமும் கேட்கவில்லை. உள்ளத்தில் ஒரு குறிக்கோளைக் கொண்டவாறு சில நல்ல மனிதர்களிடம் என்னுடைய நோக்கம் நிறைவடைவதற்காக ஏதாவது 'விர்த்' கேட்கவும் செய்யவும் ஆரம்பித்தேன். அதாவது துஆக்கள் செய்ய ஆரம்பித்தேன். முழுமையான வழிகாட்டியாக இருப்பவர் ஸைய்யத் ஆக இருக்க வேண்டும் என்பதே நோக்கமாக இருந்தது. அதாவது ஸைய்யத் ஆக இருக்கக்கூடிய ஒரு பீர் கிடைக்க வேண்டும் என்பதாகும். ஆகையால் பல நாட்களாக தியானம் மற்றும் 'விர்த்' இவற்றை ஆர்வத்துடன் செய்து வந்தேன். கபருஸ்தானில், கிணற்றில், நதிகளில், மலைகளில், பெரியவர்களின் கல்லறைகளில் இவ்வாறு இரவு மறைவான இடங்களுக்கு சென்று நாற்பது நாட்கள் தியானம் செய்தேன். எதுவும் நடக்கவில்லை. இறுதியில் ஒருநாள் அவநம்பிக்கை அடைந்து படுத்து உறங்கி விட்டேன். உறக்கத்தில் ஒரு பெரியவரைக் கண்டேன். அவர் எனக்கு ஆறுதல் கூறினார். "மகனே! உனக்கு கிடைக்கக்கூடியவர் அனைவருடைய வழிகாட்டியாகவும் இருப்பார். அவருக்கு முன் எல்லா பீர்களும் முர்ஷிதுகளும் தோல்வியடைந்து விடுவார்கள்" என்றார். இந்தக் காட்சியைக் கண்டு உள்ளத்தில் திருப்தி ஏற்பட்டது. மேலும் முழுமையான வழிகாட்டி இன்சா அல்லாஹ் கிடைத்து விடுவார் என நம்பிக்கை ஏற்பட்டது.

இறுதியில் 1906 -ல் ஓர் இரவில் நான் கண்டேன். ஒரு பரந்த மைதானம் இருக்கின்றது. அது மிகவும் தூய்மையாகவும் அதில் மேடை உயரமாகவும் அரசர்களுக்கு தகுதியானதைப் போன்று தயாராக உள்ளது. என்னைப் போன்ற குறைவான அறிவுடையவனால் அதன் புகழை எடுத்துக் கூற முடியாது. என்னிடம் ஒரு

மனிதர் கூறுகின்றார். "இங்கு இன்று நபிமார்களின் மாநாடு நடைபெற உள்ளது. மேலும் ரஸூல் கரீம் அதாவது முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் இன்று தனது அன்பிற்குரிய மகனை அரியணையில் அமர்த்துவதற்காக வருகிறார்கள்" என்கிறார். நான் மகிழ்ச்சியினால் துள்ளிக் குதிக்கின்றேன். மிகவும் வேமாக ஓடியவாறு, இந்த மைதானத்தில் மேடைக்கு மிகவும் அருகில் எல்லாருக்கும் முன்பாக மூச்சிறைத்தவாறு சென்றடைந்தேன். சிறிது நேரத்திற்குப் பிறகு அந்த மைதானம் தூய மக்களால் ஒளிமிகுந்த முகங்களைக் கொண்ட மக்களால் வேகமாக நிரம்பியது. அதன் பின்னர் அனைவரது பார்வையும் மேல் நோக்கிச் சென்றது. நானும் மேலே பார்த்தேன். விமானங்களைப் போன்று ஊஞ்சல்கள் மிகவும் அழகாக செய்யப்பட்டுள்ளது தெரிந்தது. அதில் ஒன்றில் ஒரு ஆண் மட்டும் மற்றொன்றில் ஒரு ஆண், ஒரு பெண் மட்டும் அல்லது இரண்டு பெண்கள், வேறொன்றில் இரண்டு பெண்கள் மட்டும் அல்லது ஆண் மட்டும் வானத்திலிருந்து மிகவும் மெதுவாக வருகின்றார்கள். இது அந்த நபி ஆவார். இவர் இந்த நபி ஆவார் என எனக்கு தானாகவே தெரிய வருகின்றது. பல உம்முகாத்துல் மூஃமினும் உதாரணமாக அன்னை ஹவ்வா, அன்னை ஹாஜிரா, அன்னை மரியம், பீபி ஃபாத்திமா, கதீஜா (ரலி) போன்ற அனைவரும் வந்தார்கள். அனைத்து நபிமார்கள் (அலை) மற்றும் உம்முகாத்துல் மூஃமின்கள் வந்து தத்தமது இருக்கைகளில் அமர்ந்தார்கள். அவர்கள் காத்திருந்தார்கள். வெள்ளிக்கிழமை அன்று காதியானில் மஸ்ஜித் அக்ஸாவில் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் உடைய காலத்தைப் பற்றி கூறுகின்றார்கள். அவர்களுக்காக காத்திருப்பதுண்டு. (அதை இவர் சுட்டிக் காட்டுகிறார்). சில சமயங்களில் சிலர் வானத்தை நோக்கி முகம் திருப்பியவாறு, "தகப்பனும் மகனும் வந்து கொண்டுதான் இருப்பார்கள்" என கூறினார்கள்.

நீண்ட நேரத்திற்குப் பிறகு ஒரு ஊஞ்சல் இறங்கியது. அது அனைத்து ஊஞ்சல்களையும் விட அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதில் ஜனாப் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் மஸீஹ் மவ்வூது (அலை) இறங்கி மேடையில் அடுத்தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு நாற்காலிகளில் அமர்ந்தார்கள். முதலில் எனக்கு ரஸூல் கரீம் (ஸல்) அவர்களும் பிறகு மிர்ஸா சாஹிப் மஸீஹ் மவ்வூதும் 'அஸ்ஸலாமு அலைக்கும்' எனக் கூறினார்கள். முதலில் துவக்கவுரை ரஸூல் (ஸல்) அவர்கள் நிகழ்த்தினார்கள். "நான் எனது மகனை நபிமார்களாகிய உங்கள் முன்பாக இதனைப் பற்றி ஏற்கனவே செய்திகள் கூறப்பட்டிருக்கின்றன. அரியணையில் அமர வைக்கிறேன்" எனக் கூறினார்கள். அதற்குப் பிறகு ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் மஸீஹ் மவ்வூது (அலை) உரை நிகழ்த்தினார்கள். அப்போது எனக்கு ஸைய்யத் உடைய உண்மைத்தன்மை தெரிய வந்தது. மேலும் ஹஸ்ரத் சாஹிபை பார்த்தேன். லூதியானா இரயில் நிலையத்தில் பார்த்த அதே மிர்ஸா சாஹிபாக இருந்தார்கள். ஸைய்யத் உடைய உண்மையான தரம் என்னவென்று தெரிந்த பின்பு மறுநாள் காலை எழுந்தவுடன் பைஅத்திற்கான கடிதத்தை எழுதினேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது ஆயிரக்கணக்கான அருள்கள் இறங்கட்டுமாக! என்று எழுதியுள்ளார்கள்.

**காமே கான் சாஹிபுடைய மகன் ஹஸ்ரத் முஹம்மது அலி சாஹிப் கூறுகின்றார்கள்:**

1903 அல்லது 1904 -ல் பெரிய அளவில் பிளேக் ஏற்பட்டது. அதன் பின்னர் நான் கோடையில் பைஅத் செய்தேன். முதலில் தந்தை பைஅத் செய்தார்கள். அவர் மூஸி ஆவார். பெஹிஷ்தி மக்பராவில் அடங்கப்பட்டுள்ளார். அவர் கனவில் கண்டார். அவர் வலை விரித்து வைத்திருக்கிறார். அதில் மூன்று புறாக்கள் மாட்டிக் கொண்டன. வேட்டைக்காக வலை விரிப்பார்கள். மவ்லவி பூட்டே கான் சாஹிப் அவருடைய இந்தக் கனவுக்கு இவ்வாறு விளக்கம் கொடுத்தார். "உங்களுடைய மூன்று ஆண் பிள்ளைகளும் அஹ்மதியாகி விடுவார்கள்"என்றார். அந்த வகையில் நாங்கள் மூன்று சகோதரர்களும் பின்னர் அஹ்மதியாகி விட்டோம்.

**ஹஸ்ரத் மவ்லவி சேர் அலி சாஹிப் (ரலி) வஸீரா கூறுகின்றார்கள்:**

1906 -ல் பைஅத் செய்தேன். இவர் வேறொரு மவ்லவி சேர் அலி சாஹிப் ஆவார். மவ்லவி ஜலாலுத்தீன் சாஹிபுடைய சகோதரர் உ.பி.யின் முபல்லிக் மவ்லவி முஹம்மது அலி சாஹிபிடம் திருக்குர்ஆன்

கற்று வந்தேன். அவருக்கு மவ்லவி ஜலாலுத்தீன் சாஹிப் மூலமாக தெரிவிக்கப்பட்டது. அவர் பைஅத் செய்தவர். பிறகு மவ்லவி அலி முஹம்மது சாஹிப் எங்களுக்கு தப்லீக் செய்ய ஆரம்பித்தார்கள். நான் இஸ்திகாரா செய்ய ஆரம்பித்தேன். நாற்பது நாட்கள் வரை யா அக்பரு அஃக்பிர்னி என்ற விர்தை தொடர்ந்து செய்து வந்தேன். எனக்கு "வாதம் செய்பவர் உண்மையாளர்" என தெரிவிக்கப்பட்டது.

கூறுகின்றார்கள்: பல்வேறு வாதம் புரிபவர்கள் இருந்தனர். இது யாரைக் குறித்து என்பது தெரியாமல் இருந்தது. மறுநாள் இரவு "வாதம் புரியக்கூடியவர் உண்மையாளர்" எனக் கூறப்பட்டது. பிறகு கூறுகின்றார்கள்: மூன்றாவது நாள் இரவு "காதியானில் எவர் வாதம் புரிந்துள்ளாரோ அவர் உண்மையாளர்" எனக் கூறப்பட்டது. அதன்படி நான் பைஅத் செய்தேன். பிறகு இரண்டாவது கிலாஃபத்தின் போதும் நற்செய்தியின் அடிப்படையிலேயே நான் பைஅத் செய்தேன். இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் உடைய காலத்தில் ஒரு குழப்பம் ஏற்பட்டது. அப்போதும் அல்லாஹ்வின் புறமிருந்து நற்செய்தி இறங்கியது. பிறகு அவர் பைஅத் செய்தார்.

**மோகாவைச் சேர்ந்த ஹஸ்ரத் சேக் முஹம்மது அயாஸ் சாஹிப் கூறுகின்றார்கள்:**

1903 -ல் ஹஸ்ரத் சாஹிபுடைய கையில் பைஅத் செய்தேன். மாங்கட் என்ற ஊரைச் சேர்ந்த மவ்லவி நூர் முஹம்மது சாஹிப் அவர்கள் தப்லீக் செய்தார்கள். சேக் சாஹிப் கூறுகின்றார்கள். "நான் கனவில் கண்டேன். எனது வீட்டின் முற்றத்தில் படுத்திருக்கிறேன். ஒரு நிலவு போன்ற உருவம் எனக்கு முன்பாக சென்றது. மேலும் இதனுடன் இது காதியானி அஹ்மதாகும் எனக் கூறப்பட்டது. கனவிலேயே நான் இது சரியில்லை என நினைக்கின்றேன். இந்த நிலையிலேயே நான் விழித்தெழுந்தேன். மேலும் மவ்லவி நூர் முஹம்மது சாஹிபிடம் கனவைப் பற்றி கூறினேன். அவர் கனவைத் தவிர வந்த மற்ற எண்ணங்கள் சைத்தானுடையதாகும் எனக் கூறினார். இதன் மூலமாக நான் பைஅத் செய்தேன்."

மியான் காதர் பக்ஷ் சாஹிபுடைய மகன் ஹஸ்ரத் அப்துர் ரஹீம் சாஹிப் ஷு செய்பவராகவும், புக் பைண்டராகவும் இருந்தார். கூறுகின்றார்கள்:

1906 -ல் எனக்கு காதியான் வருவதற்கு ஆர்வம் ஏற்பட்டது. எனது குடும்பத்தில் எனது மாமா முஹம்மது அப்துல்லாஹ் சாஹிபுடைய மகன் முஹம்மது இஸ்மாயில் சாஹிப் புக் பைண்டர் மற்றும் அவரது பையன்கள் சகோதரர் முஹம்மது அப்துல்லாஹ் சாஹிப் புக் பைண்டர் அஹ்மதியாவார்கள். அவர்களை விட மிகவும் அதிக பற்றுள்ளவராக எனது மாமி அதாவது முஹம்மது அப்துல்லாஹ் சாஹிபுடைய தாயார் இருந்தார்கள். அவர்கள் மூலமாக எனது மாமா சாஹிப் சகோதரர் முஹம்மது அப்துல்லாஹ் சாஹிப் காதியான் வந்தார்கள். அஹ்மதியானார்கள். நான் மாமாவிடம் திருக்குர்ஆன் கற்று வந்தேன். அவர் சொல்வதைக் கேட்டு வந்தேன். உதாரணம் கூறி வந்தார்கள். பாருங்கள்! நீயும் எனக்கு அப்துல்லாஹ் போன்றுதான். அதாவது அவரைப் போன்று பிரியமானவர் ஆவீர்கள். நான் கூறுவதைக் கேளுங்கள். மக்கள் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபை தவறாக பேசுகின்றார்கள். ஆனால் அவரது ஜமாஅத் முன்னேறறம் அடைகிறது. உதாரணமாக, நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். வயலில் எந்த அளவு அசுத்தமும், குப்பையும் போடப்படுமோ அதே அளவு நல்ல பசுமையான விளைச்சல் ஏற்படும். இந்த மக்கள் எவ்வளவு கெட்டதை பேசுகின்றார்களோ அதே அளவு ஜமாஅத் முன்னேற்றம் அடைந்து கொண்டே செல்லும்.

ஆக, இறைவனுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள். இப்படிப்பட்ட தீய மக்களின் நெருக்கத்திலிருந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய அடிமையாக இணைந்திருக்கின்றேன். மாமா சாஹிப் மற்றும் மாமி சாஹிபாவுடன் எனக்கு ஒரு சிறப்பான அன்பு இருந்தது. உன்னை கண்டிப்பாக காதியான் அழைத்துச் செல்ல வேண்டும் என கூறி வந்தனர். எனக்கும் ஆர்வம் இருந்தது. ஒருநாள் ஒரு வழி பயணச் செலவு நான் கொடுப்பேன். ஒரு வழி பயணச் செலவு நீ செய்ய வேண்டும் என கூறினார்கள். அந்த சிறுவனுக்கு ஆர்வமூட்டினார்கள். செல்ல வேண்டியதுதான். ஆனால் குறைந்தது உனது செலவும் நீ தான் செய்ய வேண்டும். கூறுகின்றார்கள். எனக்கு ஒவ்வொரு ஜுமுஆவுடைய நாளிலும் 1 பைசா கிடைக்கும். எட்டு நாளில் கை செலவுக்காக ஒரு பைசா கிடைத்து வந்தது. அந்தக் காலத்தில் காசுகளுக்கு நல்ல மதிப்பு இருந்தது.

கூறுகின்றார்கள். நான் ஒவ்வொரு மாதமும் ஒரு அனா சேர்த்து வைத்தேன். ஒரு அனாவில் நான்கு பைசாக்கள் இருக்கும். எனக்கு என்னிடம் எத்தனை அனாக்கள் இருந்தன என நினைவில் இல்லை. எவ்வாறாயினும் இருந்ததையெல்லாம் எனது மாமாவிடம் கொடுத்தேன். மற்ற அனைத்து செலவுகளையும் மாமா சாஹிப் செலவழித்தார்கள். இதுவும் அந்த சிறுவனுக்கு உணர்வு ஏற்படுத்துவதற்காகவே ஆகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சந்திக்கப் போகும் போது சிறிதளவாவது நீ தியாகம் செய்ய வேண்டும். அதன் பழக்கத்தை இவ்வாறு ஏற்படுத்தினார்கள். இது மிகவும் சிறிய தொகையாக இருந்திருக்கும். பெரும்பான்மையான தொகையை அவரது மாமா தான் செலவழித்திருப்பார். கூறுகின்றார்: 1907 -ல் காதியானில் முஹம்மது அப்துல்லாஹ் சாஹிபுடைய சகோதரி ஃபாத்திமா ஜபேரி என்ற பெயரைக் கொண்டவர் தூரத்து சகோதரியாக இருந்தார். அவரை விடுவதற்காக காதியான் வந்தேன். இங்கு வந்து உண்மையான முஸ்லிம் ஆனேன். மேலும் ஜமாஅத்தில் இணைந்தேன். அல்லாஹ்வுக்கே நன்றி!

**அப்துல்லாஹ் சாஹிபுடைய மகன் அப்துஸ் ஸத்தார் சாஹிப் கூறுகின்றார்கள்:**

“நான் எனது தந்தையிடம் மஸீஹ் நாஸிரி உடைய மரணத்தைப் பற்றி எங்களுக்கு தெரியாது. உயிருடன் இருப்பதைப் பற்றி தெரியும். அதாவது, நான் ஈஸா நபி (அலை) அவர்களுடைய மரணத்தைப் பற்றி எங்களுக்கு தெரியாது. அவர் உயிருடன் உள்ளார் என நம்பிக்கை இருப்பது பற்றி எங்களுக்கு தெரியும். அவரது மரணம் பற்றி எங்களுக்கு அது எவ்வாறு நடந்தது என புரிய முடியவில்லை. இதனைப் பற்றி எங்களுக்கு புரிய வையுங்கள் எனக் கேட்டேன்.” அப்போது இவர் அஹ்மதி ஆகவில்லை. இவரது தந்தை மட்டும் தான் அஹ்மதியாகி இருந்தார்.

அவர் கூறுகின்றார்: எனது தந்தை 8, 10 மாதங்கள் கழித்து ஒரு கனவு கண்டதாக கூறினார்கள். நான் ராவி நதியின் கரையில் இரண்டு கூடாரங்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் கண்டேன். ஒன்று, மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடையது ஆகும். மற்றொன்று, ரஸூல் கரீம் (ஸல்) அவர்களுடையதாகும். நான் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களது கூடாரத்தினுள் நுழைந்தேன். மேலும் மஸீஹ் மவ்வூது என்று வாதம் செய்யக்கூடிய பெரியவர் எப்படிப்பட்டவர்? என்று கேள்வி கேட்டேன். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இந்த மனிதர் மிகவும் தகுதியானவர்; மிகவும் தகுதியானவர்; மிகவும் தகுதியானவர் என்று மூன்று முறை விரல்களின் சைகை காட்டிக் கூறினார்கள். முழுமையான சாட்சியத்தைக் கண்டு அன்னார் அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது வாதத்தில் உண்மையாளர் என்று முழுமையாக நம்பிக்கை வந்து விட்டது. நமக்கு உயிருடன் இருப்பது மரணம் பற்றி பிரச்சனை தேவையில்லை. தந்தை கூறினார். எனக்கு கனவு வந்தது. இது மிகவும் தெளிவான கனவாகும். ஆகையால் எனக்கு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் இருக்கின்றாரா? அல்லது மரணித்து விட்டாரா? என்பது பற்றி தெரியாது. இதன் அவசியல் இல்லை. எனக்கு இந்தக் காட்சியே போதுமானதாகும். எனவே நான் பைஅத் செய்து விட்டேன்.”

**மியான் நபி பக்ஷ் சாஹிபுடைய மகன் ஹஸ்ரத் சவுத்ரி நிஸாமுத்தீன் சாஹிப் கூறுகின்றார்கள்:**

பிளேக் உடைய முன்னறிவிப்பின் போது நடந்த மூன்றாவது சம்பவம் மவ்ஸா மாச்சியான் கிராமத்தின் மவ்லவி ரல்து சாஹிபுடைய மனைவி மற்றும் 4, 5 பெண்கள் பிளேக்கின் அச்சத்தினால் மிகவும் கடுமையான மழை மற்றும் பனியில் பைஅத் செய்வதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வந்தார்கள். பிளேக் நோய் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. ஷிக்கார் மாச்சியான் கிராமத்திலிருந்து 5, 6 பெண்கள், குளிர் அதிகமாக இருந்தும், மழை பெய்து கொண்டிருந்தும் பிளேக் நோயின் அச்சத்தினால் பைஅத் செய்வதன் மூலமே உயிர் பிழைக்க முடியும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வந்தார்கள். மழையில் நனைந்தவாறு வந்தார்கள். ஹஸ்ரத் சாஹிப் அவர்களது பரிதாபமான நிலைமையைக் கண்டு, பயணம் மற்றும் குளிர் போன்றவற்றைக் கண்டு மிகவும் கருணையுடன் அவர்களுக்குத் தேவையான ஏற்பாடுகளை செய்தார்கள். நனைந்த துணிகளை மாற்றி புதிய துணிகளை அணியச் செய்தார்கள். குளிரைப் போக்குவதற்காக நெருப்பில் குளிர்காயச் செய்தார்கள். நிலைமை சரியானவுடன் எங்களுடைய பைஅத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று அந்தப் பெண்கள் சொன்னவுடன் என்றார்கள். ஹுஸூர் அவர்கள்

கருணையுடன் விண்ணப்பத்தை ஏற்றவாறு பைஅத்தில் இணையச் செய்தார்கள். மேற்கூறப்பட்ட மவ்லவி சாஹிபின் மனைவி நபி கரீம் (ஸல்) அவர்களுடைய தூது, "அஸ்ஸலாமு அலைக்கும்" என்று கூறினார்கள். அங்கிருந்தவர்களில் மவ்லவி சாஹிப் உடைய மனைவி கொஞ்சம் படித்தவராக இருந்தார்கள். அவர் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த பிறகு நபி (ஸல்) அவர்களுடைய ஹதீஸில் வரக்கூடிய எனது மஸீஹிற்கு தூதை எட்ட வையுங்கள் என்பதை எட்ட வைத்தார்கள். இதனால் ஹுஸுர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். மேலும் "நபி (ஸல்) அவர்களுடைய இந்த தூதை இன்று வரை எவரும் எட்ட வைத்ததில்லை" எனக் கூறினார்கள். மக்கள் வருவார்கள். பைஅத் செய்வார்கள். பிறகு சென்று விடுவார்கள். பிறகு மேற்கூறப்பட்ட பைஅத் செய்தவர்கள் ஹுஸுருடைய அருளுக்குரிய ஆடையின் ஒரு துண்டு கிடைக்க வேண்டும் எனக் கேட்டனர். தபருக் கிடைத்தது.

சவுத்ரி ஹாஜி அயாஸ் கான் சாஹிப். இவர் ஹான்கி போன்ற இடங்களில் முபல்லிக் ஆகவும் இருந்து வந்திருக்கிறார். அவர் தனது தந்தை பற்றி கூறுகின்றார்கள். "ஹஸ்ரத் சவுத்ரி கரம்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் இவருக்கு கூறினார். அதை இவரது மகன் அறிவிப்பு செய்கிறார். சவுத்ரி கரம்தீன் சாஹிபுடைய வார்த்தைகள் இதுவாகும். ஹஸ்ரத் சாஹிப் ஜெஹ்லம் வருவதைப் பற்றி வதந்திகள் இருந்த போது, உங்களது தாயார் ஹுஸைன் பீவியின் கனவில் அல்லாஹ்விடமிருந்து தெரிய வந்தது. ஜெஹ்லம் வரக்கூடிய இந்த மனிதர், மக்கள் அவரை எதிர்க்கின்றனர். அவர் உண்மையாளர் ஆவார். காலையில் உமது தாயார் என்னிடம் கூறினார். இந்த தூய மனிதரை அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சந்திப்பது மேலும் பைஅத் செய்வது நற்பாக்கியம் ஆகும் என்றார்கள். இந்த வகையில் எந்த நாள் ஹஸ்ரத் சாஹிப் ஜெஹ்லம் வந்தார்களோ அன்று காரியான் மற்றும் மற்ற இரயில் நிலையங்களில் முந்தைய நாளிலிருந்தே கூட்டம் கூட ஆரம்பித்தது. ஹுஸுரைப் பார்ப்பதற்கு எந்த வழியும் தென்படவில்லை. ஆகையால் ஹாஜி அயாஸ் கான் உடைய தந்தை கூறுகின்றார். வழக்கு நாள் அன்று உன்னுடைய தாயார் சஹர் நேரத்தில் எனக்கு ரொட்டி சமைத்து தந்தார். நான் சாப்பிட்டு விட்டு நடந்தே ஜெஹ்லம் சென்றேன். நீதிமன்ற வளாகத்தில் மிகவும் கஷ்டப்பட்டு சென்றடைந்தேன். ஏனென்றால் மக்கள் அருளுக்குரிய ஹஸ்ரத் சாஹிபுடைய முகத்தைப் பார்ப்பறத்காக ஏங்கிக் கொண்டிருந்தார்கள். டெபுட்டி சாஹிபுடைய வீட்டின் பக்கத்தில் மிகவும் அழகான தாடியுடைய மவ்லவிமார்கள் அறிவுரை கூறி வந்தார்கள். அதாவது சில அஹ்மதிகள் கூறினார்கள். பஞ்சாபியில், இறைவனின் படைப்பினங்களே நீண்ட காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த உண்மையான மஸீஹ் மவ்வூது மற்றும் மஹ்தி மஸ்வூது வந்து விட்டார். இதுவே அந்த நேரம் ஆகும். எனவே அவர் மீது ஈமான் கொள்ளுங்கள்.

எங்களுடைய காரியான் உடைய அஹ்மதி மக்கள் முதலிலேயே ஜெஹ்லம் சென்றிருந்தார்கள். அங்கு லங்கர் மற்றும் பாதுகாப்பிற்கான ஏற்பாடு செய்ய வேண்டியதிருந்தது. ஹஸ்ரத் சாஹிப் டெபுட்டி உடைய நீதிமன்றத்தில் நுழைந்ததும் ஒன்று, இரண்டு நிமிடத்திற்குள் அறையிலிருந்து வெளியே வந்தார்கள். அவர்கள் குற்றமற்றவர் என விடுவிக்கப்பட்டார்கள் என ஆரவாரம் செய்யப்பட்டது. பிறகு வண்டியில் அமர்ந்து இரயில் நிலையத்தை நோக்கி சென்றார்கள். நான் ஹுஸுர் வரை எவ்வாறு செல்வேன்? எவ்வாறு பைஅத் செய்வேன்? என தவித்தேன். மேலும் ஹுஸுர் ஊர் வழியாக இரயில் நிலையத்திற்குச் சென்றார்களா அல்லது வெறொரு வழிப்பாதையாக சென்றார்களா என தெரியவில்லை. ஆனால் நான் ஓடி நேராக இரயில் நிலையம் வந்தேன். ஹுஸுர் அவர்கள் வண்டியில் அமர்ந்திருந்தார்கள். மேலும் காவலர்கள் மற்ற அனைவரையும் இரயில் நிலையத்திலிருந்து வெளியேற்றி விட்டார்கள். வேலிக்கு வெளியே எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டமாகவே தென்பட்டார்கள். காவலர்கள் நடைபாதையிலிருந்து எங்களை வெளியேற்ற விரும்பிய போது, எனது பார்வை இரயில்வே உடைய பணியாளர் மீது பட்டது. அவரது பெயர் அப்துல்லாஹ் ஆகும். அவர் மோசா பூடே ஜங்கலில் வசிப்பவராவார். கபடி மற்றும் குஸ்தி விளையாடுவதில் பிரபல்யமானவர் ஆவார். எனக்கு தெரிந்தவர் ஆவார். அவரிடம் நான் என்னை காவலர் வெளியேற்றாதபடி ஏதாவது வழி செய் எனக் கூறினேன். நான் அருகே சென்று மிர்ஸா சாஹிபை சந்திக்க வேண்டும் என்றேன்.

ஆகையால் இரயில்வே பணியாளர் அப்துல்லாஹ் எனது கையில் இரயில்வேயின் ஒரு கொடியைக் கொடுத்தார். ஒன்று, அவரது கையில் இருந்தது. மற்றொன்று, என்னுடைய கையில் இருந்தது. நானும்

இரயில்வே பணியாளர் போன்று, நாங்கள் இருவரும் நடக்க ஆரம்பித்தோம். இப்போது ஒரு சிலர் மட்டும் இருந்தனர். மற்றவர்கள் வேலிக்கு வெளியே இருந்தனர். நான் கொடியை அங்கேயே போட்டு விட்டு, ஹஸ்ரத் சாஹிப் இருந்த பெட்டியை நோக்கிச் சென்றேன். ஹஸ்ரத் சாஹிப் பையிலிருந்து கடிகாரத்தை எடுத்துக் கூறினார்கள். இன்னும் 10 நிமிடங்கள் உள்ளன. யாராவது பைஅத் செய்ய வேண்டுமென்றால் செய்யட்டும்; அழையுங்கள் என்றார்கள். பைஅத் என்ற வார்த்தை ஹுஸூருடைய நாவில் தான் இருந்தது. நான் ஜன்னலுக்கு முன்னால் footpath-ல் இருந்து முன்னே சென்றேன். ஒரு மவ்லவி சாஹிப் வெளியே வந்து மக்களை பைஅத் செய்வதற்காக அழைத்தார்கள். அழைப்பதற்காக வெளியே தான் வந்தார்கள். நான் மேலும் தலையைக் குனிந்தேன். அப்போது ஹஸ்ரத் சாஹிப் என்னை பார்த்து பைஅத் செய்ய வேண்டுமா? என்றார்கள். நான் ஆமாம் என்றேன். ஜீ சாஹிப் மேரே என்றேன். ஹுஸூர் எனது கையை தமது அருளுக்குரிய கையில் எடுத்துக் கொண்டார்கள். கலிமா சஹாதத்தை ஓதினார்கள். மேலும் பல விசயங்கள், இணை வைக்க மாட்டேன். உண்மையைப் பேசுவேன் போன்றவற்றைக் கூறினார்கள். இப்போது எனக்கு இவை சரியாக நினைவில் இல்லை. ஹுஸூர் அவர்கள் எனது கையை தனது கையில் எடுத்துக் கொண்டவுடன் அங்கிருந்து ஒரு மவ்லவி சாஹிப் பைஅத் செய்வதற்காக அழைத்த போது இரயில் நிலையத்தின் வராண்டாவில் இருந்தவர்கள் மேலும் வேலிக்கு வெளியே இருந்தஅனைவரும் ஒன்றுகூடினார்கள். வேலியைத் தாண்டி ஒரு நிமிடத்தில் பிளாட்ஃபாரத்தை நிரப்பி விட்டார்கள். ஹுஸூர் இவருடைய கையில் கை வையுங்கள் என்றார்கள். அதாவது இவருடைய கை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கையில் இருந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: இவருடைய கையின் மீது பைஅத் செய்யக்கூடியவர்கள் தமது கைகளை வையுங்கள் என்றார்கள். முதலில் எனது கை மற்றும் முழங்கையில் நான்கு ஐந்து பேர்தான் கைவைத்தார்கள். ஆனால் அதன் பின்னர் பெருங்கூட்டம் கூடியது. ஹுஸூர் அவர்கள் இவரது தோள்பட்டையில் கை வையுங்கள் என்றார்கள். அதற்குப் பின்னர் இருப்பவர்கள் இவ்வாறு தோள்பட்டையிலும் கைகளிலும் கையை வையுங்கள் என்றார்கள். ஆக, என்னுடைய கை ஹஸ்ரத் சாஹிபுடைய கையில் இருந்தது. பின்னால் தோள்பட்டையில் கை வைத்த தூரம் எதுவரை இருந்தது என்பது தெரியாது. ஹஸ்ரத் சாஹிப் எனது கையை மிகவும் உறுதியாக பிடித்திருந்தார்கள். ஏறக்குறைய கண்கள் மூடியிருந்தன. ஹுஸூருடைய தலைப்பாகை பனிக்கட்டியைப் போன்று வெண்மையாக இருந்தது. தலைப்பாகையின் கீழ் குல்லா இருக்கவில்லை. மாறாக ரோமி தொப்பி போன்று ஏதோ இருந்தது. தலைப்பாகையின் மேல் 15, 20 நேர்த்தியான மடிப்புகள் தொங்கிக் கொண்டிருந்தது. அது மிகவும் அழகாக இருந்தது. பைஅத் வாங்கிய பிறகு ஹுஸூர் அவர்கள் கடிகாரத்தை வெளியே எடுத்துப் பார்த்வாறு கூறினார்கள். ஒரு நிமிடம் தான் மீதம் உள்ளது. மக்களை வண்டியை விட்டு தள்ளியிருக்க செய்ய வேண்டும். ஏதாவது அசம்பாவிதம் நடைபெற்று விடக்கூடாது என்றார்கள். இது ஹஸ்ரத் சாஹிப் உடைய வார்த்தைகள் அல்ல. ஆனால் பொருள் இதுதான். இதனால் மக்கள் கொஞ்சம் வண்டியை விட்டு விலகினர். ஆனால் நான் வாசலின் கைப்பிடியைப் பிடித்து வைத்திருந்தேன். பிறகு வண்டி மெல்ல நகர ஆரம்பித்தது. நான் மிகவும் ஏக்கத்துடன் ஹுஸூரைப் பார்த்தேன். ஹுஸூர் கொஞ்சம் முன்பாக குனிந்து எனது முதுகில் தட்டினார்கள். இறைவன் பாதுகாவலன் ஆவான் என்று கூறினார்கள். ஹுஸூர் இவ்வாறு கூறிய பிறகு நான் படிக்கட்டிலிருந்து கீழே இறங்கி வந்தேன். நான் என்ன கூறுவது! மிகவும் அபூர்வமான நேரம், அபூர்வமான உணர்வாக இருந்தது. இந்த அளவு மக்களை மறுமையில் தான் பார்க்க முடியும். மரங்களின் மீதும் தரையிலும் மக்களின் கூட்டம் நிரம்பி காணப்பட்டது. பைஅத் செய்யும் போது தந்தையின் வயது 52 ஆக இருந்தது.

**ஹஸ்ரத் மவ்லா தர்த் சாஹிப் கூறுகின்றார்கள்:**

1880க்கு முன்புள்ள சம்பவம் ஆகும். அப்போது எனக்கு 10, 11 வயதாக இருந்திருக்கும். நான் கனவில் பார்த்தேன். ஒரு பெரிய கூட்டம் மும்முரமாக செயல்பட்டுக் கொண்டிருந்தது. ஒரு மனிதர் அவர்களுக்கு முன்பாக சுறுசுறுப்பாக சென்று கொண்டிருந்தார். தலையிலும் கழுத்திலும் எதையும் அணியவில்லை. இடுப்பில் கச்சை கட்டியுள்ளார்கள். அனைவருக்கும் முன்பாக இருப்பவர் வழிகாட்டியாக தெரிகிறார். அவர், ஹஃபத் ஸமீன் ஹஃபத் ஆஸ்மா ஆஸ் கேஷ் பேதா ஹமீ குனம் என்று கூறுகின்றார். பின்னால் இருப்பவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஆஸ் கேஷ் பேதா ஹமீகுனம் என்று கூறியவாறு ஆடிக்கொண்டே செல்கின்றனர். ஒரு உறுதியான நான்கு

சுவருக்குள் சென்று நுழைகின்றனர். ஏழு பூமியையும், ஏழு வானத்தையும் நானே படைக்கக் கூடியவனாவேன். அல்லது நானே படைத்தேன்; படைப்பேன் என்பதாகும். எவ்வாறிருப்பினும் இதுவும் புதிய பூமி புதிய வானம் படைக்கப்படுவதன் பக்கம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மீண்டும் இவருக்கு இது கனவில் காட்டப்பட்டது.

**அடுத்த அறிவிப்பில் இவ்வாறு கூறுகின்றார்:**

எனது அண்ணன் அப்துல் ஹக்கீம் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்தார். அவருடைய சிகிச்சையை ஜமாஅத்தின் கொடிய எதிரியான ஒரு மருத்துவர் மவ்லவி செய்து வந்தார். அவருடைய அண்ணன் சம்சுதீன் அஹ்மதியாக இருந்தார். மோசாதோ கிராமம் சக்கர் சக்கரி என்ற பகுதியில் இருந்தார். இந்த மருத்துவர் மவ்லவி ஹுஸூருடைய கண்ணியத்திற்கு எதிரான தரக்குறைவான வார்த்தைகளை உபயோகித்தார். நான் அப்போது அங்கு இல்லை. நோயாளியாக இருந்த எனது சகோதரர் அவரை தடுத்தார். தனது மருத்துவரை அவ்வாறு பேசுவதை விட்டும் தடுத்தார். நான் வெளியிலிருந்து வந்த போது அந்த மவ்லவி சென்றிருந்தார். எனது சகோதரர் மிகவும் சகிப்புத் தன்மையுடன் நான் இந்த மருத்துவரிடம் சிகிச்சை பெற மாட்டேன். இவர் ஹஸ்ரத் சாஹிபின் கண்ணியத்திற்கு எதிரான சொற்களை பயன்படுத்தி விட்டார். இந்த மவ்லவி வழியிலேயே பிளேக் நோயிற்கு ஆளானார். பிறகு எனது சகோதரரை பாஹவல்நகர் அழைத்துச் சென்றேன். அங்கு இரண்டு Assistant Surgeon சிகிச்சை அளித்து வந்தார்கள். இறுதியில் இவர் பிழைக்கமாட்டார் என கூறினார்கள். சிகிச்சையை நிறுத்தி விடுங்கள்; பணத்தை வீணாக்காதீர்கள் என்றார்கள். பிளேக் மிகவும் வேகமாக பரவியிருந்தது. தீய வார்த்தைகளைக் கூறிய மவ்லவி வழியிலேயே பிளேக் நோயிற்கு ஆளாகி அழிந்து விட்டான். ஆனால் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த இவரது சகோதரருக்கும் நோய் அதிகரித்துக் கொண்டே சென்றது. பாஹல்பூர் கொண்டு சென்ற போது மருத்துவர்களும் காப்பாற்ற முடியாது என கை விரித்து விட்டனர்.

நான் ஒரு வருடத்திற்குப் பிறகு ஹுஸூருக்கு கடிதம் எழுதினேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பதில் எழுதினார்கள். கவலைப்படாதீர்கள். அல்லாஹ் மரணித்தவர்களை உயிர்பெறச் செய்வான். நாமும் துஆ செய்வோம். நீங்களும் துஆ செய்யுங்கள். இன்சா அல்லாஹ் குணம் கிடைக்கும் என எழுதினார்கள். இந்தக் கடிதத்திற்கு மறுநாள் நான் பார்த்தேன். சகோதரரின் காய்ச்சல் குறைந்து கொண்டே சென்றது. இப்போது உங்களுக்கு காய்ச்சல் இல்லை என்று கூறி, நான் அவரை தூக்கி உட்கார வைத்தேன். நானும் ஆதரவாக அருகில் அமர்ந்தேன். எனது எரிந்து கொண்டிருந்த நெஞ்சு இப்போது குளிராக உள்ளது என்று சகோதரர் கூறினார். நான் ஹுஸூருக்கு கடிதம் எழுதினேன். ஹுஸூரும் பதில் எழுதினார்கள். அதாவது நாம் துஆ செய்வோம். இறைவன் நிவாரணம் அளிப்பான் என்று கூறிய போது, அதனைக் கேட்டு பஞ்சாபியில் கூறினார். “இனி நான் மரணிக்க மாட்டேன்; மஸீஹ் மரணித்தவரை உயிர் பெறச் செய்து விட்டார்.” இதற்குப் பிறகு அவர் அஹ்மதி ஆகி விட்டார். அதாவது அவர் பைஅத் செய்து விட்டார். பிறகு ஆரோக்கியம் கிடைத்தது. இதற்கு முன்பு இவர் அஹ்மதி இல்லை. ஆனால் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக பேசுவதை விரும்பாதவராய் இருந்தார்.

**ஹஸ்ரத் சூஃபி நபி பக்ஷ் சாஹிப் கூறுகின்றார்கள்:**

ஹுஸூர் அவர்கள் பள்ளிவாசலுக்கு வந்ததும் எனது பார்வை ஹுஸூருடைய முகத்தின் மீது பட்டது. நான் ஹுஸூரைக் கண்டு கொண்டேன். உடனே உள்ளத்தில் மின்னலைப் போன்று ஓர் அலை உருவானது. இவர் நான் செப்டம்பர் 1882 -ல் எனது மாணவப்பருவத்தில் நான் கண்ட கனவில் பார்த்த அதே அருளுக்குரிய நபர் ஆவார். ஹஸ்ரத் சாஹிப் கனவில் பார்த்த அதே ஆடையைத்தான் அன்றும் அணிந்திருந்தார்கள்.

**ஃபைஸ்லாவைச் சேர்ந்த மவ்லானா பத்ருத்தீன் சாஹிபுடைய மகன் ஹஸ்ரத் மவ்லவி இமாமுத்தீன் சாஹிப் கூறுகின்றார்கள்:**

அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைவதற்குரிய முழுமையான வழிகாட்டல் உண்மையான கனவின் மூலம் கிடைத்தது. சுன்னத்தான இஸ்திகாராவை பலமுறை செய்த பிறகு எனக்கு கனவு வந்தது. நான் முதன் முறையாக பட்டாலாவைச் சேர்ந்த பீர் சாஹிபிடம் அனுமதி கேட்டு காதியானை பார்ப்பதற்காக வந்த போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சந்திக்கும் சமயத்தில் வஹி நபிமார்களுக்குரிய சிறப்பாகும். நீங்கள் எவ்வாறு வாதம் புரிகின்றீர்கள்? என்று கேட்டேன். கூறினார்கள். வஹி தேனீக்களுக்குக் கூட இறங்குகிறது.

ஸைய்யத் அப்துல் காதிர், ஹஸ்ரத் முஜத்தித் அல்ப் சானி, சேக் அஹ்மது சர்கிந்தி ஆகியோர் கூட வஹி மற்றும் இல்ஹாம் இறைவனுடைய சந்திப்பு வலிமார்களுக்கும் ஏற்படும் எனக் கூறியுள்ளார்கள் என்றார்கள். நான் விவாதம் செய்ய வரவில்லை என்றேன். எனக்கு சூஃபிக்களைப் போன்று உண்மையான கனவு அல்லது இல்ஹாம் அல்லது நபி (ஸல்) அவர்களது சந்திப்பு மூலம் தான் உங்களுடைய சத்தியத்தின் உண்மைத்தன்மை மீது எனக்கு நம்பிக்கை வரும் என்றேன்.

அதாவது நான் விவாதம் செய்யமாட்டேன். ஏதாவது உண்மையான கனவு அல்லது இல்ஹாம் இறங்க வேண்டும். அல்லது நபி (ஸல்) அவர்களை கனவில் சந்திக்க வேண்டும் என்றார். அன்னார் இஸ்திகாரா செய்யுங்கள் என்றார்கள். நான் எந்த இஸ்திகாரா என்றேன். எனது உண்மைத்தன்மையை அல்லாஹ்விடம் கேளுங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனவே அவனிடம் கேளுங்கள். எவ்வாறு என்று கேட்டேன். இஸ்திகாரா செய்து என்று ஹஸ்ரத் சாஹிப் கூறினார்கள். இந்த இரண்டு விசயங்கள் மூலம் இந்த மனிதர் தந்திரக்காரர் இல்லை என்ற நம்பிக்கை உண்டானது. இவ்வாறு நான்கு மாதங்கள் சுன்னத்தான இஸ்திகாராவை செய்தேன். அதற்கு பிறகு நான் இந்த கனவை கண்டேன். நான் ஒரு பள்ளிவாசலுக்கு வந்திருக்கிறேன். அது முபாரக் பள்ளிவாசலைப் போன்று உள்ளது. ஹஸ்ரத் சாஹிப் சுப்ஹ் தொழுகை தொழுத பிறகு முற்றத்தில் அருளுக்குரிய மிகவும் ஒளிமிகுந்த தன்மையுடன் வந்து அமர்ந்தார்கள். நான் உங்களுடைய வாதத்தின் உண்மைக்கு சாட்சியைக் கேட்கிறேன். அதாவது உங்களுடைய வாதம் எவ்வாறு உண்மையாகும்? என்பதை கேட்க விரும்புகின்றேன் என்றார். அன்னாரிடமிருந்து மிகவும் உயர்ந்த சப்தம் ஒன்று வந்தது. அதாவது யார் வரவேண்டியதிருந்ததோ அவர் வந்து விட்டார். இந்த சப்தம் எனது உள்ளத்தினுள் நுழைந்தது. மேலும் முழுமையான நம்பிக்கை ஏற்பட்டது. யார் வர வேண்டியதிருந்ததோ அவர் இந்த மஸீஹ் மவ்வூது மஹ்தி மவ்வூது இந்த மிர்ஸா சாஹிப் ஆவார். இஸ்திகாரா சமயத்தின் போது நான் பல துஆக்களை மிகவும் உருக்கத்துடனும் மன்றாடலுடனும் கேட்டேன். அல்லாஹ்வே! எனக்கு தெளிவாக தெரிவிக்க வில்லை என்றால் மறுமையில் என்னிடம் கேள்வி கேட்கப்பட்டால் நான் உலகில் மிகவும் உருக்கத்துடன் ஈஸா மஹ்தி இவர் தான் என்றால் எனக்கு தெரியப்படுத்துவாயாக என துஆ செய்தேன். நீ ஏன் எனக்கு தெரியப்படுத்தவில்லை? என்றே கூறுவேன் என்று துஆ செய்தேன். பிறகு நான் ஹுஸூருக்கு கடிதம் எழுத ஆரம்பித்தேன். பெரும்பாலும் பதிலில், தொழுகையை மிகவும் உளப்பூர்வமாக தொழுவதற்கு வலியுறுத்தியிருப்பார்கள். அதாவது மிகவும் உருக்கத்துடன் தொழுமாறு கூறுவார்கள். பெரும்பாலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதனையே வலியுறுத்திக் கூறுவார்கள். எதிரிகள் கேட்கக்கூடிய ஆட்சேபனைகளுக்கான பதிலை மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் எழுதி வந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் நான் ஆரம்பத்திலேயே சம்சுதீன் சியால் சரீஃப் மர்ஹூம் வாலாவிடம் சிஸ்திய்யா முறையின்படி பைஅத் செய்திருக்கின்றேனே பிறகு எனது நெருக்கத்திற்குரிய பீர் அவருடைய முரீத் கலீஃபா ஸைய்யத் ஹைதர் சா சாஹிப் மர்ஹூம் மற்றும் தரிக்காயே காதிரியாவில் பீர் சாஹிப் ஹுஸைன் சாஹிப் பட்டாலாவிடமும் செய்துள்ளேனே! இப்போது புதிதாக பைஅத் செய்ய வேண்டிய அவசியம் உள்ளதா? என்றேன். அன்னார் அது வேறு பைஅத் ஆகும். இப்போது செய்யக்கூடிய பைஅத் தான் மிகவும் அவசியமான பைஅத் ஆகும் என்றார்கள். அதன்படி நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கையில் பைஅத் செய்தேன். இது சில அறிவிப்புகளாகும். இதனை நான் உங்களுக்கு கூறியுள்ளேன்.

தற்போது சில மர்ஹூம்களைப் பற்றியும் கூறுவேன். அதில் ஒன்று கண்ணியத்திற்குரிய ஃபஸ்லுர் ரஹ்மான் கான் சாஹிப் உடையதாகும். இவர் ராவல்பிண்டி மாவட்டத்தின் அமீர் ஆவார். அக்டோபர் 29ம் தேதி 2012 -ல் சிறிது நோய்வாய்ப்பட்டு 83 வயதில் வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் இன்றைய நாட்களில் இங்கு (இலண்டனில்) தான் இருந்தார். ஜல்ஸாவிற்கு வந்திருந்தார். நான் அவரை சிறிது காலம் தங்குங்கள் என்றேன். நோய் மிக நீண்ட காலமாக இருந்து வந்தது. ஆனால் மாசா அல்லாஹ் அறிவு மிகவும் விழிப்புடன் இருந்தது. தைரியத்துடன் தலைமையின் பொறுப்பை கவனித்தார்கள். இவர் கண்ணியத்திற்குரிய மவ்லவி அப்துல் கஃபூர் சாஹிபுடைய மகன் ஆவார். அவர் இரண்டாவது கிலாஃபத்தின் போது பைஅத் செய்தார். கண்ணியத்திற்குரிய ஃபஸ்லுர் ரஹ்மான் சாஹிப் பிறப்பால் அஹ்மதி ஆவார். இவர் ஆரம்பக் கல்வியை பாரா சனாட் என்ற ஊரில் கற்றார்கள். மிடில் மற்றும் மெட்ரிக் தேர்வுகளில் சிறப்பான முறையில் தேர்ச்சி பெற்றார்கள். 1948 -ல் இஸ்லாமியக் கல்லூரி பெசாவரில் சேர்ந்து படித்தார்கள். 1950 - 51

ஆம் ஆண்டு FSC –ல் தேர்ச்சி பெற்றார்கள். அதற்குப் பிறகு Punjab College of Engineering and Technology லாஹூரில் சேர்ந்தார்கள். 1953–54 ஆம் ஆண்டு B.Sc. மெக்கானிக்கல் இன்ஜினியரிங், சிவில் இன்ஜினியரிங்கில் தேர்ச்சி பெற்றார்கள். பல்வேறு அரசாங்கம் மற்றும் தனியார் துறைகளில் உயர்ந்த பொறுப்புகளை வகித்து வந்துள்ளார். இன்ஜினியரிங் காலேஜில் கல்வி பயிலும் போது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவரை அஹ்மதிய்யா இன்டர் காலேஜ் அஸோஸியேஸன் உடைய President ஆக நியமித்தார்கள்.

மேலும் கூறுகின்றார்கள்: ஒருமுறை அஹ்மதியல்லாத சக மாணவர்களுடன் இவர் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் உடைய ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்கள். பிறகு அங்கு வந்து ஹுஸூரிடம் தெரிவித்ததும், ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இன்றைய நாட்களில் நான் மிகவும் வேலையாக இருக்கின்றேன் என்றார்கள். அதற்கு இவர் நான் இதற்கான அறிவிப்பையும் செய்து விட்டேன் என்றார். பிறகு அதன்படி இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் நான் லாஹூர் வருகின்றேன் என்றார்கள். இவரிடம் ஏற்பாட்டை செய்வதற்கு கூறினார்கள். இவர் ஏற்பாட்டை செய்தார். லாஹூர் ஜமாஅத் உடைய அமீருக்கு பிறகு நான் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் லாஹூர் வருகிறார்கள் என்றே தெரிய வந்தது. எவ்வாறாயினும் இவர் அந்தக் காலத்திலிருந்தே ஜமாஅத் பணிகளில் ஈடுபட்டிருந்தார்கள். ஹைதராபாத் ஜமாஅத் நிறுவப்பட்ட சமயத்தில் பணி தொடர்பாக அங்கு இருந்தார்கள். மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் உடைய காலத்தில் குத்தாமுல் அஹ்மதிய்யா அமைப்பின் இலாக்கா காயித் மற்றும் ஹைதராபாத் மாவட்டத்தின் காஸியாகவும் தொண்டாற்றியுள்ளார்கள். இதனை தவிர ஹல்கா சதராக இருந்திருக்கிறார்கள். இஸ்லாஹ் வ இர்சாத் செயலராகவும் மாவட்ட நாயிப் அமீராகவும் இருந்திருக்கிறார். 1998 –ல் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இவரை ராவல்பிண்டி நகரத்தின் மற்றும் மாவட்டத்தின் அமீராக நியமித்தார்கள். கிலாஃபத்துடனும் ஜமாஅத் அமைப்புடனும் உணர்வுப்பூர்வமான அன்பு கொண்டிருந்தார். ஒவ்வொரு கூட்டத்திலும் இவரது பேச்சின் மையக்கருத்து ஜமாஅத்தின் சம்பவங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபாக்களின் வாழ்க்கை மற்றும் சம்பவங்கள், அஹ்மதிய்யத்தின் கலீஃபாக்கள் ஆகியவை தொடர்பாகவே இருக்கும். எப்போதும் கிலாஃபத்திற்கு கட்டுப்படுதல் மற்றும் காலத்தின் கலீஃபாவுடன் உறுதியான தொடர்பு குறித்து தனது பிள்ளைகளுக்கு வலியுறுத்தி வந்தார்கள். மிகவும் அதிகமாக துஆ செய்யக்கூடியவர் ஆவார். இவருடைய பிள்ளைகள் கூறுகின்றனர். ஒவ்வொரு நாளும் காலையில் வீட்டை விட்டு வெளியே செல்வதற்கு முன்பு அனைவரையும் உட்கார வைத்து துஆ செய்வார்கள். ஆரம்பத்திலிருந்தே இந்த வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள்.

கடந்த சில நாட்களாக மருத்துவமனையில் இருந்தார்கள். அங்கும் மயக்க நிலையிலிருந்து திரும்பிய போதும் "இப்போது கையை உயர்த்தி துஆ செய்யுங்கள்" என்பார்கள். இவரது பிரிவால் வாடுபவர்களில் மனைவியைத் தவிர 2 மகள்கள் மற்றும் 4 மகன்கள் உள்ளனர். மகன்கள் அனைவரும் வெளிநாட்டில் இருக்கின்றார்கள். மகள்களும் வெளிநாட்டில் இருக்கின்றார்கள். இவரது அக்கா மரணம் அடைந்த பிறகு அவரது பிள்ளைகள் சிறுவர்களாக இருந்தனர். அவர்களையும் வளர்த்தார்கள். அவரது பிள்ளைகளில் ஒரு மகளுக்கு இரண்டு முறை பெரிய துக்கம் ஏற்பட்டது. அப்போது அவர்களை நன்றாக கவனித்து வந்தார்கள். ஏனென்றால் இவரது சகோதரிகளுக்கு சாங்கடில் திருமணம் செய்து வைத்தார்கள். அங்கு இவரது சகோதரி மகளுடைய கணவரை சஹீதாக்கினார்கள். பிறகு இரண்டாவது திருமணம் அவரது சகோதரருடன் பீர் ஹபீப் சாஹிபுடன் செய்து வைத்தார்கள். அவரையும் சில நாட்களுக்கு பிறகு சஹீதாக்கினார்கள். இவ்வாறு இவரது சகோதரியின் மகள் இரண்டு முறை விதவையானார்கள். இரண்டு முறையும் சஹீதுடைய விதவையானார்கள். இவரைப் பற்றி Acting Ameer முபாரக் அஹ்மது சாஹிப் ராவல்பிண்டி எழுதுகிறார்கள்.

ஜமாஅத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் அவர் சிறுவராக இருந்தாலும், பெரியவராக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் இவரது கருணையிலிருந்து தனிப்பட்ட முறையில் அனைவரும் பலன் அடைந்து வந்தனர். அல்லாஹ் வழிநடத்திச் செல்லக்கூடிய திறமையை அதிகமாக வழங்கியிருந்தான். இறைவனால் வழங்கப்பட்ட அந்த திறமைகள் தான் இவரது அமீர் காலத்தில் நவம்பர் 1998 லிருந்து ராவல்பிண்டி ஜமாஅத் பொருள்கள் மற்றும் உயிர்கள் தியாகங்களில் ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றம் அடைந்தது. மேலும் நாட்டில்

சிறந்த ஜமாஅத்துகளில் ராவல்பிண்டியும் ஒன்றாக எண்ணப்பட்டது. ஒட்டு மொத்தமாக இவரது ஜமாஅத் தொண்டு அரை நூற்றாண்டு அதாவது 50 வருடங்களாக இருந்திருக்கிறது. இரண்டாவது கிலாஃபத் காலத்திலிருந்து இது இருந்தது.

மர்கஸி கமிட்டியில் பல்வேறு கமிட்டிகளில் உறுப்பினராக இருந்து வந்தார்கள். இவர் அமீராக இருந்த காலத்தில் தாரீக்கே அஹ்மதிய்யத் புத்தகம் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இதற்காக முதுமை மற்றும் பல்வேறு நோய்கள் இருந்தும் கூட பல நாட்கள் தொடர்ந்து பல மணி நேரம் உட்கார வேண்டியதிருந்தது. அந்த வரலாற்றுப் புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்தையும் வார்த்தைக்கு வார்த்தை படித்துக் கேட்டு பிறகு அதற்கு அனுமதி வழங்கினார்கள். மேலும் கிலாஃபத் ஜுப்ளியின் நூற்றாண்டு விழாவின் போது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் ராவல்பிண்டிக்கு ஒரு பார்ப்பதற்கு அழகான தனிப்பட்ட முறையில் கிலாஃபத் ஜுப்ளி செவனியர் வெளியிட வாய்ப்பு கிடைத்தது. இதற்குரிய அனைத்து பாராட்டும் இவரையே சாரும். இந்த முக்கியமான பணியில் ஆர்வம் கொண்டார்கள். கட்டுரை எழுதும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனிப்பட்ட முறையில் போன் செய்து கட்டுரைகள் எழுதச் செய்தார்கள். நான் கூறியது போன்று 1998 –ல் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இவரை ராவல்பிண்டி ஜமாஅத்திற்கு அமீராக நியமித்தார்கள். அதற்கு முன்பு ஏறக்குறைய நான்கரை வருடங்கள் வரை நாயிப் அமீராக தொண்டாற்றுவதற்கு வாய்ப்பு கிடைத்து வந்தது. அமாரத் மாற்றப்பட்ட போது நான் அப்போது நாஸிர் ஆஃலாவாக இருந்தேன். எனக்கு ஞாபகம் இருக்கிறது. இவர் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் சதர் குத்தாமுல் அஹ்மதிய்யாவாக இருந்த போது அவர்களுடன் காயித் குத்தாமுல் அஹ்மதிய்யாவுடைய பிரதிநிதியாக செயல்பட்டு வந்தார்கள். அப்போது பல பெயர்கள் என் முன்னால் இருந்ததில்லை. நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் எனக்கு ராவல்பிண்டி நகருக்கும் மாவட்டத்திற்கும் அமீர் பதவிக்கு ஏதாவது பெயரை தெரியப்படுத்துங்கள் என எழுதியிருந்தார்கள். அப்போது இவருடைய ஒரு பெயரை மட்டும் தான் நான் அனுப்பினேன். அதற்கு உடனடியாக நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அனுமதி வழங்கினார்கள். மேலும் இவரை நான் நன்கறிவேன். அவர் நன்றாக பணிபுரியக் கூடியவர் ஆவார். அமைப்புரீதியிலும், நல்லொழுக்கத்திலும், விசுவாசத்திலும் மிகச் சிறந்தவர் ஆவார். இன்சா அல்லாஹ் பணியை கவனிப்பார்கள் என எழுதியிருந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் மிகவும் நல்ல முறையில் பணிகளைச் செய்தார்கள். வாழ்வின் கடைசி நாள் வரை ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை மிகவும் சிறந்த முறையில் செய்தார்கள். மேலும் கிலாஃபத்திற்காக உயிரை அர்ப்பணிக்கக் கூடியவராவார். மேலும் சைகையின்படி நடக்க தெரிந்தவர் ஆவார். அதனை நற்பேறாக கருதி வந்தார். ஜமாஅத் பணிகளில் மட்டும் அல்ல. மாறாக நானும் பார்த்திருக்கின்றேன். சொந்த விசயங்களிலும் இங்கு மாநாட்டிற்கு வந்த போது கொஞ்ச காலம் இங்கு தங்குங்கள் என்றேன். இவரது மனைவியின் முகத்திலிருந்து இங்கு தங்க விரும்பவில்லை என தெரிந்தது. ஆனால் இவர் மிகவும் உற்சாகத்துடன் இன்சா அல்லாஹ் நீங்கள் கூறும் வரை இருப்போம் என்றார்கள். ஒருவேளை இங்குதான் இவரது வஃபாத் நிகழ வேண்டுமென இருந்தது போலும். ஜனாஸா தொழ வைக்க வேண்டுமென இருந்தது. இன்சா அல்லாஹ் இவரது ஜனாஸாவை நான் தொழ வைப்பேன். இதற்காகத்தான் அல்லாஹ் இவ்வாறான ஏற்பாட்டை செய்திருக்கின்றான். டாக்டர் நூரி சாஹிபுடன் இவருக்கு நல்ல தொடர்பு இருந்தது.

அவர் எழுதுகிறார்: இவருடன் என்னுடைய தொடர்பு பல வகையில் இருந்தது. நெருங்கிய நண்பராவார். நாயிப் அமீராகவும் டாக்டர் சாஹிப் இவருடன் பணியாற்றி இருக்கிறார்கள். மேலும் டாக்டர் என்ற ரீதியிலும் தொடர்பு இருந்தது. எல்லா வகையிலும் நான் இவரை பார்த்திருக்கின்றேன். ஃபஸ்லுர் ரஹ்மான் சாஹிப் பல சிறப்புகளுக்கு சொந்தக்காரர் ஆவார். இறைவனிடத்தில் மிகவும் அஞ்சக்கூடிய, எல்லா நிலையிலம் அவனிடமே நம்பிக்கை வைக்கக் கூடியவராவார். கிலாஃபத்துடன் முழுமையான விசுவாசமும், கட்டுப்படுதல், அன்பு நேசம் கொண்டவராக இவர் இருந்தார். எப்போது காலத்தின் கலீஃபாவை பற்றி பேசினாலும் இவரது குரல் தாழ்ந்து விடும். கண்களிலிருந்து கண்ணீர் சிந்த ஆரம்பிக்கும். இவரது முழு வாழ்வும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்கு அர்ப்பணமாகி இருந்தது. இவருக்கு பல நோய்கள் இருந்தன. வீல் சேர் உபயோகப்படுத்தி வந்தார். அவ்வாறு இருந்தும் கூட மார்க்க சேவைக்காக மிகவும் முயற்சிகளை செய்து வந்தார்கள். கடைசி 2, 3 வருடங்கள் வீல் சேரில் தான் இருந்தார்கள். ஒருபோதும் குறை கூறமாட்டார்கள். ஒருபோதும் முகம் சுழிக்க மாட்டார்கள். ஏழைகள், தேவையுடையவர்கள், அனாதைகள், விதவைகள், தேவையுடைய மாணவர்கள், பல்வேறு கஷ்டங்களில்

இருக்கக்கூடியவர்கள், பொருளாதார அளவில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஆகியவர்களுக்கு உதவி மற்றும் வழிகாட்டி வந்தார்கள்.

**ராவல்பிண்டி மாவட்டத்தின் காயித் குத்தாமுல் அஹ்மதிய்யா எழுதுகின்றார்கள்:**

மதிப்பிற்குரிய அமீர் சாஹிப் பல்வேறு தனிப்பட்ட சிறப்புகளுக்கு சொந்தக்காரர் ஆவார். இவர் மிகவும் அதிக அன்பு செலுத்தக்கூடிய ஏழைகளுக்கு உதவக்கூடிய இறை நியதியில் திருப்தி கொள்ளக்கூடிய, கிலாஃபத்துடன் உளப்பூர்வமான அன்பு கொள்ளக் கூடிய, பொறுமை மேற்கொள்ளக்கூடிய, நன்றி செலுத்தக்கூடிய நபர் ஆவார். மார்க்கத்திற்கு உலகத்தை விட அதிக முக்கியத்துவம் கொடுப்பதன் உண்மையான எடுத்துக்காட்டு ஆவார்.

கூறுகின்றார்கள்: எனக்கு அமீர் சாஹிபுடன் மிகவும் நெருக்கமாக இருப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. இவரது கருணை மற்றும் அன்பு ஒரு தந்தையை விட மிகுதியாக இருந்தது. இந்த நடைமுறை எல்லா இடங்களிலும் எல்லா அமீரிடமும் எல்லா தலைவர்களிடமும் இருக்க வேண்டும். குத்தாமுல் அஹ்மதிய்யா அமைப்புடனும் மற்ற அமைப்புகளுடனும், ஒவ்வொரு காயிதும் இளைஞரும் இந்த நடைமுறையைப் பேண வேண்டும்.

இவர் எழுதுகின்றார்: எனக்கு எந்த அளவு முடியுமோ ஒரு மகனாக அவர்களுக்கு கீழ் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்கு வாய்ப்பு கிடைத்தது. இவரைப் பற்றி கூறப்பட்ட சிறப்பம்சங்களில் எனக்கு தெரிந்த வரை எந்த இடத்திலும் மிகைத்து கூறப்படவில்லை. மாறாக ஒருவேளை ஏதாவது குறைத்து வேண்டுமானால் எழுதி இருக்கலாம்.

காயித் சாஹிப் எழுதுகின்றார்கள்: அல்லாஹ் அமீர் சாஹிபிற்கு வழிகாட்டுதல் மற்றும் தலைமைத்துவ திறமைகளை நன்றாகவே வழங்கியிருந்தான். அவர் ஒவ்வொரு பொறுப்பாளர் மற்றும் பணியாளரிடமும் அவரது தகுதி, திறமை, மற்றும் சக்திக்கேற்ப வேலை வாங்கக்கூடிய முறை தெரிந்திருந்தார். ஒவ்வொரு பொறுப்பாளரும், ஜமாஅத்துடைய ஒவ்வொரு உறுப்பினரும் இவருடைய ஒவ்வொரு கட்டளைக்கும் கூற்றுக்கும் கட்டுப்பட்டு மகிழ்ச்சி அடைவர். மேலும் அதனை தமக்கு பெருமையாக கருதுவர்.

குத்தாமுல் அஹ்மதிய்யாவுடன் இவர்களது கருணை ஒரு தந்தையைவிட அதிகமாக இருந்தது. எனக்கு இவ்வாறு கூறுவது எந்தவித கற்பனையும் கடந்த 10 வருடத்தில் ராவல்பிண்டி ஜமாஅத் பெற்ற முன்னேற்றம் மற்றும் உறுதியாக்குதல் கண்ணியத்திற்குரிய அமீர் சாஹிபுடைய பங்கு மிகப் பெரிய அளவில் இருக்கிறது.

பிறகு எழுதுகிறார்கள்: ஜமாஅத்தார்களுடன் அன்பு மற்றும் அவர்களது கஷ்டங்களைக் குறித்து அதிக கவனம் செலுத்தி வந்தார்கள். மே 28ம் தேதிக்குப் பின்னர் அமீர் சாஹிப் குத்தாமுல் அஹ்மதிய்யா ராவல்பிண்டியின் மீது பல வேலைகளை சுமத்தினார்கள். அதில் கட்டுமானப் பணிகளில் மிக அதிகமான செலவுகள் ஆகின. ஆனால் அமீர் சாஹிப் இதனைப் பற்றி ஒருபோதும் கவலைப்பட்டதில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் ராவல்பிண்டியுடைய ஒரு அஹ்மதி பொறுப்பாளர் இந்த செலவுகளைப் பற்றி அமீர் சாஹிப் செலவுகள் அதிகமாகின்றன என்றார். அதற்கு அமீர் சாஹிப் ஓர் அஹ்மதியின் உயிருக்கு முன்பு இலட்சக்கணக்கான ரூபாய் கூட ஒரு பொருட்டே அல்ல. ஒருவேளை ஏதாவது அஹ்மதியுடைய உயிர் போய் விட்டால் காலத்தின் கலீஃபாவிற்கு நாம் என்ன பதில் கூற முடியும்? சில இலட்ச ரூபாய்களை மிச்சம் பிடிப்பதற்காக இந்த ஏற்பாட்டை செய்யவில்லை எனக் கூற முடியுமா? என்றார்கள்.

ராவல்பிண்டி நகரின் நிலைமை மோசமான பிறகு அங்கு ஹல்காவில் ஜுமுஆ தொழுகை தொழ ஆரம்பிக்கப்பட்டது. அங்கு பள்ளிவாசலில் தொழுவதற்கு அனுமதியில்லை. ஜுமுஆ பல்வேறு ஹல்காக்களில் தொழப்படும். ராவல்பிண்டி நகரிலும் பதற்றமான நிலை காணப்படுகிறது. அல்லாஹ் அருள் செய்வானாக! அவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அங்குள்ள நிலைமை சீராகட்டுமாக!

கூறுகின்றார்கள்: இவருக்கு ஜமாஅத்துடன் தொடர்பு கொள்ள முடியவில்லை என மிக அதிகமாக கவலையிருந்தது. ஓரிடத்தில் ஜமாஅத் கூடினால் அமீர் ஜமாஅத் அவர்களுக்கு வழிகாட்டுவதற்கு அவர்களுடைய பேச்சைக் கேட்பதற்கு கூறுவதற்கு வாய்ப்பு கிடைத்து விடும். ஆனால் அங்கு அலுவலகம் கூட நடத்தக்கூடாது என்று

சீல் வைக்கப்பட்டிருந்தது. எனக்கு ஏதாவது ஹல்காவில் ஏற்பாடுகள் செய்து என்னை ஜுமுஆவிற்கு அழைத்துச் செல்லுங்கள் என கட்டளையிடப்பட்டிருந்தது. அதாவது அமீர் சாஹிப், காயித் சாஹிபிடம் கூறியிருந்தார்கள். ஓரிடத்தில் ஒன்றுகூட முடியாது. ஆகையால் ஃபஸ்லுர் ரஹ்மான் சாஹிப் அமீர் என்ற முறையில் பல்வேறு இடங்களுக்கு சென்று வருவார்கள். இதன் மூலம் மக்களுடன் தொடர்பு தொடர்ந்து இருக்கும்.

கூறுகின்றார்கள்: நான் அவர்களை படிக்கட்டுகள் ஏற வேண்டியது இல்லாத இடத்திற்கு அழைத்துச் செல்வதற்கு முயற்சி செய்தேன். ஏனென்றால் அவர்களுக்கு மூட்டு வலி இருந்தது. ஒருமுறை அவர்களே பைஅத்துல் ஹம்து மரி சாலை செல்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்றார்கள். அதற்கு காயித் சாஹிப், அமீர் சாஹிப் அங்கு பல படிகள் இருக்கும். உங்களுக்கு கடினமாக இருக்கும் என்றார்கள். ஆனால் அமீர் சாஹிப் கூறினார்கள். ஒன்றும் ஆகாது. நண்பர்களை சந்தித்து பல நாட்கள் ஆகிவிட்டன என்றார்கள். பிறகு தலைமையக பொறுப்பாளர்களுக்கு நல்ல கண்ணியம் அளிப்பார்கள். இதனையும் அமீர்கள் எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். தலைமையக பொறுப்பாளர்களுக்கு எப்போதும் கண்ணியம் அளியுங்கள். அவர்கள் எந்தவித கண்ணியத்தையும் எதிர்பார்ப்பதில்லை. எந்த தலைமையக பொறுப்பாளருக்கும் தனக்கு கண்ணியம் கிடைக்க வேண்டும் என்ற எண்ணம் வரக்கூடாது. ஆனால் இது ஜமாஅத்தார்கள் ஜமாஅத் பொறுப்பாளர்களுடைய பணியாகும். அமீர்மார்கள் போன்றோர் இந்த விசயத்தில் கவனம் செலுத்துங்கள்.

சதர் சாஹிப் குத்தாமுல் அஹ்மதிய்யா ராவல்பிண்டி வந்தார்கள். அப்போது இவர் நான் உங்களை சந்திக்க வேண்டும் என்றார்கள். நேரம் கொடுங்கள். நான் வந்து விடுவேன் என சதர் சாஹிப் கூறினார்கள். அதற்கு இவர் இல்லை. நீங்கள் வரக்கூடாது. நீங்கள் எங்கு தங்கியுள்ளீர்களோ அங்கேயே இருங்கள். உங்களை சந்திப்பதற்கு நானே வருவேன் என்றார்கள். இங்கு வந்த போது ராவல்பிண்டி ஜமாஅத்தைப் பற்றி கவலை இருந்தது. தொடர்ந்து காயித் சாஹிபுடன் தொடர்பு வைத்திருந்தார்கள். அவருக்கு வழிகாட்டல் கொடுத்துக் கொண்டே வந்தார்கள். தஹ்ரீகே ஜதீத் பற்றி என்னிடம் கேட்டார்கள். வருடம் முடிகிறதே என்ன நிலைமை எனக் கேட்டார்கள். அவர் இறந்து விட்டார். அல்லாஹ்வின் அருளால் தஹ்ரீகே ஜதீத் உடைய நிலைமை நன்றாகவே உள்ளது. இதற்கான அறிவிப்பை இன்சா அல்லாஹ் அடுத்த ஜுமுஆவில் வெளியிடுவேன். ராவல்பிண்டி ஜமாஅத் இதில் போதுமான முன்னேற்றம் அடைந்துள்ளது. மாசா அல்லாஹ்.

அறிவிக்க வேண்டிய இரண்டாவது மரணம் மோசர் மஹ்மூத் சாஹிப். இவர் ஆப்பிரிக்கன் அமெரிக்கன் அஹ்மதி ஆவார். 84 வயதில் அக்டோபர் 29ம் தேதி மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். இவர் 1958 -ல் பைஅத் செய்து இஸ்லாம் அஹ்மதிய்யத்தில் இணைந்தார். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அவருக்கு பல்வேறு இன்னல்களை சந்திக்க நேர்ந்தது. அதிகமாக சகிப்புத் தன்மையுடனும் உறுதியான நிலைநிற்றலுடனும் அதனை பொறுத்துக் கொண்டார்கள். இவர் தப்லீக் செயலராக இருந்தார். அதற்கு பிறகு 15 வருடங்களுக்கும் மேலாக சதர் ஜமாஅத் நியூயார்க் -ல் தொண்டாற்றக்கூடிய வாய்ப்பினைப் பெற்றார். தப்லீக் செய்யும் அறிவும் மிக அதிகமாக இருந்தது. தப்லீக் ஸ்டால் போடப்பட்டால் அல்லது பிரசுரம் வினியோகம் செய்யக்கூடிய நிகழ்ச்சி இருந்தால் அதில் மிகவும் ஆர்வத்துடன் கலந்து கொள்வார். நாள் முழுவதும் உடன் இருப்பார். தொழுகை, நோன்பு ஆகியவற்றைக் கடைபிடிக்கக் கூடியவர். மிகவும் தன்னடக்கம் உடையவர். தஹஜ்ஜுத் தொழக்கூடியவர். அதிகமாக அன்பு செலுத்தக் கூடியவர், கருணை உள்ளம் கொண்டவர், அமைதியான குணமுடையவர், சிரித்த முகமுடையவர், மிக உயர்ந்த நல்லொழுக்கத்தின் சொந்தக்காரர், இரக்க குணமுடையவர், பற்றுணர்வு மிகுந்த மனிதர் ஆவார். கிலாஃபத்திற்கு அர்ப்பணிப்பவர், காலத்தின் கலீஃபாவின் எல்லா கட்டளைகளையும் உடனடியாக செயல்படுத்தக்கூடியவர், ஜமாஅத் அமைப்பிற்கு கட்டுப்பட்டவராவார். ஜமாஅத் முபல்லிக்குகளுடன் மிகவும் அன்புடனும் கண்ணியத்துடனும் அணுகுவார். ஜமாஅத்தின் ஒவ்வொரு கூட்டங்களிலும் கலந்து கொள்வார். ஆலோசனை கேட்கப்பட்டால் எப்போதும் பலன் தரக்கூடிய சிறந்த ஆலோசனையை கூறுவார். பைத்துஸ் ஸபர் நியூயார்க்கில் ஒவ்வொரு வருடமும் பூஞ்செடிகளை நடுவார். வருடம் முழுவதும் அதனை பராமரித்து வருவார். பள்ளிவாசலின் தூய்மை மற்றும் அழகை பேணுவதை நற்பேறு என கருதி செய்வார். பொருள் தியாகத்தில் முன்னணியில் இருப்பார். தனது தகுதியை விட அதிகமாக பொருள் தியாகம் செய்து வந்தார். 2005 -ல் நான் வஸிய்யத்தைப் பற்றி அறிவித்த போது, அவரையும் இணையுமாறு கூறப்பட்டபோது, உள்ளூர் ஜமாஅத் சார்பாக கூறப்பட்ட போது என்ன நிபந்தனைகள் எனக் கேட்டார்.

அவருக்கு 10 சதவீதம் கொடுக்க வேண்டும் என கூறப்பட்டது. அதற்கு அவர் நான் முதலிலேயே எனது வருமானத்தில் 20, 25 சதவிகிதத்தை சந்தாவாக கொடுக்கின்றேனே என்றார். எவ்வாறிருப்பினும் இதனை போதுமானதாக கருதவில்லை. காலத்தின் கலீஃபாவின் அறிவிப்பிற்கு லப்பைக் எனக் கூற வேண்டியதிருந்தது. உடனேயே வஸிய்யத் திட்டத்தில் இணைந்து விட்டார்.

அங்குள்ள ஜமாஅத் அமைப்பு கூறுகின்றது. அவர் ஓய்வு பெற்றவர் ஆவார். ஓய்வூதியத்தில்தான் வாழ்ந்து வந்தார். ஆனாலும் இவரது சந்தா எல்லாரையும் விட அதிகமாக இருந்து வந்தது. ஏனென்றால் இவர் சரியான விகிதாச்சாரத்தின்படி சந்தா கொடுப்பவர் ஆவார். அல்லாஹ் இந்த இரண்டு மர்ஹூம்களிடம் கருணையுடன் நடந்து கொள்வானாக! தனக்கு விருப்பமான சுவர்க்கங்களில் இடமளிப்பானாக! உயர்ந்த பதவிகளை வழங்குவானாக! மஹ்மூத் சாஹிப் ஆப்பிரிக்கன் அமெரிக்கன் அஹ்மதி ஆவார். வருத்தத்தில் வாடுபவர்களில் மனைவியைத் தவிர 4 தத்தெடுத்த பிள்ளைகள் உள்ளனர். இவருக்கு பிள்ளைகள் எதுவுமில்லை. அல்லாஹ் இவர்களுக்கும் ஜமாஅத்துடன் உறுதியான தொடர்பை ஏற்படுத்துவாயாக! அவர் நிலைத்திருந்த நன்மைகளில் எப்போதும் இவர்களையும் நிலைத்திருக்கச் செய்வானாக! இதனைப் போன்று ஃபஸ்லுர் ரஹ்மான் சாஹிபுடைய பிள்ளைகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கும் அன்னாருடைய நன்மைகளை தொடர்ந்து செய்யக்கூடிய வாய்ப்பினை வழங்குவானாக! சரியான விசுவாசம் மற்றும் பற்றுறுதியுடன் ஜமாஅத்துடனும் கிலாஃபத்துடனும் இவர்கள் தொடர்பு கொண்டிருக்கட்டுமாக!

இவர்கள் இருவரது ஜனாஸா தொழுகையை நான் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு தொழ வைப்பேன். ஒரு ஜனாஸா ஃபஸ்லுர் ரஹ்மான் சாஹிபுடையது ஹாஸிர் ஜனாஸா ஆகும். அதற்காக நான் வெளியில் சென்று தொழ வைப்பேன். சகோதரர்கள் பள்ளிவாசலிலேயே இருங்கள். இங்கேயே ஜனாஸா தொழுகையை தொழுங்கள்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

AT BAIT-UL-FUTUH MOSQUE, LONDON.

**ON 02.11.2012**

Translated by : Maulavi N. ZIYAUL HAQ

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456